செ.வெ.எண்:20 நாள்: 08.09.2021

**நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட பணிகள் சார்பில் தேசிய ஊட்டச்சத்து மாத விழா நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.**

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட பணிகள் சார்பில் தேசிய ஊட்டச்சத்து மாத விழா நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் 03.05.2019 முதல் இத்திட்டமானது விரிவுப்படுத்தப்பட்டது. மேலும், இம்மாவட்டத்தில் 633 அங்கன்வாடி மையங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அம்மையங்களின் மூலம் 3,932 கர்ப்பிணிப்பெண்கள், 2,597 பாலூட்டும் தாய்மார்கள், 0-6 வயது குழந்தைகள் 29,073 பயனடைந்து வருகின்றனர். இத்திட்டம் தேசிய அளவில் ஊட்டச்சத்து பற்றாக்குறையை குறைக்க வேண்டுமென்பதேயாகும். ஊட்டச்சத்து குறைபாடு என்பது குழந்தையும் வயதிற்கேற்ற எடை மற்றும் உயரம், உயரத்திற்கேற்ற எடை உள்ளதா என்பதை கண்டறிந்து உலக சுகாதார நிறுவனத்தின் கணக்கீட்டில் இம்முறை பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இம்மாவட்டத்தில் உள்ள அனைத்து அங்கன்வாடி மையங்களிலும் இன்பன்டோ மீட்டர் (பிறந்த குழந்தையின் நீளத்தை அளவிடுதல்), ஸ்டேடியோ மீட்டர் (குழந்தையின் உயரத்தை அளவிடுதல்), சால்ட்டர் ஸ்கேல் (குழந்தையின் எடையை அளவிடுதல்), என போன்ற கருவிகள் கொண்டு வளர்ச்சிக் கண்காணிப்பை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2018ஆம் ஆண்டு முதல் மார்ச் மாதம் முதல் செப்டம்பர் மாதம் முழுவதும் தேசிய ஊட்டச்சத்து மாத விழாவாக கொண்டாடப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து இன்று நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட பணிகள் சார்பில் தேசிய ஊட்டச்சத்து மாத விழா நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சியர் அவர்கள் குத்து விளக்கேற்றி துவங்கி வைத்து இந்நிகழ்ச்சி ஊட்டச்சத்து நிறைந்த பாரம்பரிய உணவு, சிறுதானிய உணவு மற்றும் சித்த உணவு கண்காட்சியினையும், கர்ப்பிணிப் பெண்கள் பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கும் ஊட்டச்சத்து தோட்டம் அமைக்க வைட்டமின் ஏ சத்துள்ள பப்பாளி, இரும்புசத்து நிறைந்துள்ள முருங்கைக்கீரை போன்ற 100 மரக்கன்றுகளையும் வழங்கி, ஊட்டச்சத்தின் அவசியம் குறித்து கையெழுத்து இயக்கத்தினையும், விழிப்புணர்வு பேரணியையும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பே.பெரியசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.வி.ஷகிலா, மாவட்ட திட்ட அலுவலர் திரு.த.பழனி, குழந்தை திட்ட வளர்ச்சி அலுவலர் திருமதி.சித்ரா மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**